REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 29உ திங்கள் (11—2—57) ★ ★ வெளியூர்: தை 30உ செவ்வாய் (12—2—57) [இதழ் 210

இராணுவச் செலவு ரூ. 111,60,00,000!

1957—58-ம் ஆண்டின் இராணுவச் செலவிற்காக பாகிஸ்தான் ரூ. 111,60,00,000 செலவிட உத்தேசித்திருக்கிறதாம்! பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புத்தாண்டு வரவு-செலவுத் திட்டத்திலிருந்து இவ்வாறு தெரியவருகிறதாம்.

வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 7,80,00,000 துண்டு விழுகிறது; இதைப் புதிய வரிகளின்மூலம் சரிக்கட்டப்படும்.

தேயிலை மீது விதிக்கப்பட்ட சுங்கவரி 2 அணாவிலிருந்து 4 அணாவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பெருங்குடி மக்களே!

தாயகத்திற்கு புதிய அந்தஸ்து தேடித் தாருங்கள்

தி. மு. கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டில் அண்ணா முழக்கம்

மக்களுக்கு வாழ்வு தரும் கழகத் திட்டங்கள்: மாநாட்டுத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

கொட்டும் பனியில் பல்லாயிரவர் திரண்டிருந்த காட்சி

முன்னணி வீரர்கள் கொள்கை விளக்கமளித்த மாட்சி

தி. மு கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்ற அறிவிப்பு, நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளையும் தி மு. க. எதிர்ப்பு அணியில் ஒன்றுசேர்த்தது; ஆனால் மக்கள், இந்த அணியிலிருந்து வெகுதூரம் விலகி நிற்கின்றனர் என்பதை நேற்று சென்னையில் நடைபெற்ற தி மு க தேர்தல் பிரச்சார மாநாடு உணர்த்திற்று.

நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்ற செய்தி நாட்டு மக்களுக்கு தேனாக இனிக்கிறது; மாற்றாருக்கு தேளாகக் கொட்டுகிறது; அவர்கள் மனம் போனபடியெல்லாம் எதிர்க்கின்றனர்—ஏளனம் செய்கின்றனர்; என்றாலும், 'கழகத்தவரே! கண்ணியத்தின் காவலர்களே! ஜனநாயகக் கடமையாற்றும் விடுதலை வீரர்களே! மக்களாகிய நாங்கள், ஏமாளிகள் அல்ல—சுலபத்தில் ஏமாற்றப்படுவதற்கு! நாங்கள் உங்களோடுதான்' என்று கூறாமல் கூறி, ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள்—பல்லாயிரம் தாய்மார்கள் உட்பட மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாடு கழக வரலாற்றில் சிறப்பானதோர் இடம் பெறும் சிறப்புடையதாகும்.

கழகத்திற்கு மாருக மாநாடு திறந்தவெளி அரங்கில், எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்றது.

கூடியிருந்த மக்களை, சூரியனின் வெப்பம் தணிந்த ஆனால் கூரிய ஒளிக்கதிர்கள் பதம் பார்த்துக் கொண்டிருந்தன; என்றாலும், இடம் கொள்ளாத அளவுக்கு, மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தனர்.

மாநாட்டிற்கு பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் அபேட்சகர்களும் வந்திருந்தனர்.

காட்சிகள்

மாநாட்டுத் திடலில், கழகக் கொள்கைகளையும் நாட்டு நிலைகளையும் விளக்கும் படங்கள், ஓவியங்கள் வைக்கப்பட்டிருந்தன.

மாநாட்டின் நடுவே அசைந்தாடிக்கொண்டிருந்த கழகக் கொடி நகரின் பல பகுதிகளிலிருப்போரையும் 'வருக வருக'வென அசைந்தாடி அழைத்துக்கொண்டிருந்தது.

உடற்பயிற்சி விளையாட்டுக் காட்சிகள்

மாநாட்டுத் துவக்கத்தில், பல்வேறு உடற்பயிற்சி மன்றங்களைச் சேர்ந்தவர்கள் திறமைமிக்க உடற்பயிற்சிக் காட்சிகளையும், விளையாட்டுகளையும் செய்து காட்டினர்.

சிலம்பம், கம்பி வளைத்தல், வாட்போர், குத்துச்சண்டை முதலியன அவற்றில் மிக முக்கியமானவையாகும்.

பின்னர், தோழியர் மதுரை-பி. எஸ். செல்வா சிறிது நேரம் இன்னிசை வழங்கினார்.

அடுத்து, தோழர் நாகூர்-அனீபா, தமக்கே உரித்தான வெண்கலக் குரலில் கழகப் பண்களைப் பாடி, கூடியிருந்தோரை இன்னிசை வெள்ளத்தில் மூழ்கடித்தார்.

அவரது நாட்டு வாழ்த்துடன், மாநாடு துவங்கிற்று.

வரவேற்புரை

அடுத்து, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்று உரை நிகழ்த்தினார்.

'இன்னும் தி மு. கழகம் தேர்தல் அறிக்கையை வெளியிடவில்லையே' என்று கேலி பேசியவர்கள், அவசரக்காரர்கள்; என்றும், மாலை மாநாட்டிற்குப் பிறகு சென்னையில் கடந்த செப்டம்பர் திங்களில்கூடிய செயற்குழு, கழகத் தேர்தல் அறிக்கை தயாரிக்க ஒரு தனிக் குழுவை நிறுவிற்று என்றும், அந்தக் குழு தயாரித்துள்ள அறிக்கையை தலைமைக் கழகம் இன்று இந்த மாநாட்டில் வெளியிடுகிறது என்றும் எடுத்துரைத்து, பொதுச் செயலாளர் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

தோழர் க. அன்பழகன் அவர்கள் அதனை வழிமொழிந்தார்.

தலைமையுரை

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'சனநாயகம் இன்று குரல்வளை நெரிக்கப்பட்டு, கொலை செய்யப்படுகிறது; இந்த ஆபத்திலிருந்து சனநாயகத்தைக் காப்பாற்றவும், நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு பெற்றுத்தரப் போராடவும், இதுவரை மக்கள் மன்றத்தில் எடுத்தியம்பி வந்த இலட்சியத்தையும் கொள்கைகளையும் சட்ட மன்றத்தில் எடுத்துரைத்து அதற்காக வாதாடவுமாக கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது' என்ற முழக்கத்தோடு, தலைமையுரையைத் துவக்கினார்.

நாட்டு அரசியல் நிலைகளையும், கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும், அது குறித்த மாற்றாரின் கருத்துக்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார், பொதுச் செயலாளர்.

பின்னர், கேலி பேசியோர் தலை தாழ்த்தவும், மக்கள் மனம் மகிழவுமாக பலரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தி மு. க தேர்தல் அறிக்கையை மக்களின் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையே பொதுச் செயலாளர் சமர்ப்பித்தார். (2, 3-ம் பக்கங்களில், தி. மு க தேர்தல் அறிக்கை வெளியாகியிருக்கிறது.)

கழகத்தின் தேர்தல் அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு தான், பொதுச்செயலாளர் வேண்டியதற்கு ஒப்ப, மக்கள் பெரும் கையொலி எழுப்பினர்.

சி. பி. சிற்றரசு

அடுத்து தோழர் சி. பி சிற்றரசு அவர்கள், சுருக்கமாகப் பேசி பலரையும் மகிழ்வித்தார்.

க. அன்பழகன்

தோழர் க. அன்பழகன் அவர்கள், 'சட்டசபைக்கு வெளியிலிருந்து, கடந்த ஏழாண்டுக்காலமாக சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கிவந்த தி. மு. கழகம், இனி சட்டசபைக்கு உள்ளேயும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாகப் பணியாற்றவிருக்கிறது,' என்று எடுத்துரைத்து, 'வாக்காளர் பெருமக்களே! சனநாயகத்திற்கு ஒரு முறை வாய்ப்பளியுங்கள்! ஒரு கட்சி எதேச்சாதிகாரத்தை ஒழிக்க முன்வாருங்கள்!' என்று கேட்டுக் கொண்டார்.

சத்தியவாணிமுத்து

அடுத்துப் பேசிய சத்தியவாணி முத்து அவர்கள், சட்டசபையின் எதிர்காலம் குறித்துக் குறிப்பிட்டுவிட்டு, தி. மு. கழக தேர்தல் திறிக்

(4-ம் பக்கம் பார்க்க)

பல்லாயிரம் வீரர்களின் அணிவகுப்பு

வீதிகள்தோறும் விடுதலை முழக்கம்

கழகக் காளையர் பவனிவந்த காட்சி

தேர்தல் சிறப்பு மாநாட்டு ஊர்வல விவரங்கள்

சென்னை, பிப். 11—

நேற்று காலை எழுந்த உதய சூரியன் ஓய்ந்துகிடந்த நீலக்கடலை தனது பொன்னொளிக் கரங்களால் தொட்டு எழுப்பிவிட்டு, சென்னை நகரை எட்டிப்பார்த்தபோது ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டான்.

அவன் நகரை சற்று உற்று நோக்கியபோது, தனக்கில்லாத அலங்காரங்களுடன், தன்னைப்போல பல 'உதய சூரியன்'கள் நகரின் வீதிகள் பலவற்றிலும் தொங்கிக் கொண்டிருக்கக் கண்டான்; அதுவே அவன் ஆச்சரியப் பட்டதற்குக் காரணம்.

தான், இருளை அகற்றி ஒளி பரப்பி உலகை வாழ்விப்பது போலவே, தென்னாட்டின் இருளை நீக்கி ஒளி பரப்புகிற திராவிட முன்னேற்றக் கழகம், தன்னையே தேர்தல் சின்னமாகத் தேர்ந்தெடுத்து, 'ஞாயிறு போற்றுதும்—ஞாயிறு போற்றுதும்,' என்று முழங்குவது கேட்டு, மகிழ்வுற்றான்.

வீதிகள் தோறும் இரு வண்ணக்கொடிகளுக்கிடையேயும், தோரணங்களுக்கு நடுவிலேயும் 'உதய சூரியன்'கள் கம்பீரமாகத் தொங்கிக்கொண்டிருந்தன.

காலையில் எழுந்த மக்கள் இந்த விழாக் கோலக் காட்சியைக்கண்டு ஆச்சரியப்படவில்லை; அவர்கள் அறிவர்—தி. மு. கழகத் தேர்தல் பிரச்சார மாநாடு, சென்னையில் நடைபெறுகிறது என்பதை!

உற்சாகத்தோடு கழகத் தோழர்கள் இராயபுரம் நோக்கி சாரை சாரையாக வந்துகொண்டிருந்தனர்; அங்கு அறிவகத்திலிருந்து புறப்படும் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகவே இந்த வீரர் படை வரிசை வேகமாக நடைபோட்டு வந்தது.

ஊர்வலம்

தேர்தல் சிறப்பு மாநாட்டை ஒட்டி காலை 9 மணியளவில், ஊர்வலம், 'அறிவக'த்திலிருந்து புறப்பட்டது.

சுமார் 10,000 கழகத் தோழர்களும், மகளிர் மன்றத்தவரும், பொதுமக்களும் மிகுந்த உற்சாகத்தோடு கழகக் கொடியேந்தி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த பல வட்டங்களில் உள்ள கிளைக் கழகங்கள், படிப்பகங்கள், மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், சென்னை சுற்றுப்புறத்திலும் உள்ள கழகத் தோழர்களும் ஊர்வலத்தில் இடம் பெற்றனர்.

ஊர்வலத்தில், சென்னை நகரில் போட்டியிடும் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், க. அன்பழகன், சத்தியவாணி முத்து, என். ஜீவரத்தினம் ஆகிய கழக அபேட்சகர்களும், சில வெளியூர் அபேட்சகர்களும், மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொண்டனர்.

'திராவிட நாடு திராவிடருக்கே' 'திராவிட நாடு பெற்றேதீருவோம்,' 'எங்கள் வாக்கு தி. மு. கழகத்தினருக்கே,' 'உதய சூரியன் வெற்றி பெறுக'—என்று முழங்கிக் கொண்டு ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகள் வழியாகச்சென்று, மாநாடு நடைபெறும் எஸ். ஐ. ஏ. ஏ. திடலை பகல் 2-30 மணிக்கு அடைந்தது.

வழிநெடுக, அந்த அந்த வட்டாரத்தில் உள்ள கிளைக் கழகத் தோழர்கள், கிளைக் கழகங்களையும் படிப்பகங்களையும் தேர்தல் அலுவலகங்களையும் வெகு சிறப்பாக அலங்கரித்திருந்தனர்.

கழகம் வெளியிட்டுள்ள சுவரொட்டிகள் அனைத்தும், ஆங்காங்கே சிறப்புற விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன.

ஊர்வலத்தின் முன்னால் மிகப் பிரம்மாண்டமானதோர் கொடி, சென்னை மாவட்டத் தோழர்களால் எடுத்துவரப்பட்டது. அந்தக் கொடி காட்டிய வழியில், பாண்டு வாத்தியங்களின் முழக்கத்திற்கிடையில் வானைப் பிளக்கக் கோஷங்களை எழுப்பிக்கொண்டு, கழகப் போஸ்டர்களை ஏந்தியவண்ணம் தோழர்கள் அணிவகுத்து வந்த காட்சி, கண்கொள்ளாததாயிருந்தது.

கர்க்கி இராணுவ இன்ஜினீயரிங் கல்லூரியைச் சேர்ந்த இரு அதிகாரிகள் முல்லாநதியில் படகு கவிழ்ந்ததினால் இறந்துவிட்டனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—2—'57 திங்கள்

வரலாற்றில் புதிய கட்டம்

★

ஞாயிறு போற்றுதும்!
ஞாயிறு போற்றுதும்!
மக்களாட்சி ஓம்புதும்?
மக்களாட்சி ஓம்புதும்!

உதயசூரியன், கீழ்த்திசை அடிவானில் தன்னொளி முகம் காட்டி எழுந்தான்.

தமிழக இருள் அகற்றி, எங்கும் பொன்னிறக் கதிரொளி பரப்பி எழுஞாயிறு தோன்றிவிட்டது.

நாட்டின் இருள் அகலுகிறது; மக்கள் உறக்கம் நீங்கி, சோம்பல் களைந்து சுறுசுறுப்புக் காட்டுகின்றனர்.

உதயசூரியனின் பொன்னொளி விநாடிக்கு விநாடி விரிவாகப் படருகிறது—அகமும் முகமும் மலர பேரார்வத்துடன் மக்கள் செயல்பட முந்துகின்றனர்.

தமிழக வரலாற்றில், இந்தக் கட்டம் ஒரு புதிய கட்டமாகும்.

மக்களாட்சி மலர்ந்து, புகழ் மணம் பரப்பி வாழப் புத்தம் புதிய கடைக்கால் கோலுவதே இப்புதுக் கட்டம்.

தமிழக மக்கள் முழு விருப்புடன், அப்பெரும்பொறுப்பை நமது முன்னேற்றக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

மக்கள் கட்டளையை சிரமேற்கொண்டு, சட்ட மன்றத்திலிருந்தும் நாட்டு மக்களுக்கு நற்றொண்டாற்ற அணிவகுத்து நிற்கிறது.

தூய்மை எனும் எழுதுகோல் பற்றி, நேர்மை எனும் மையைத் தொட்டு, நல்வாழ்வு எனும் ஏட்டில், உரிமை எனும் எழிலோவியம் தீட்ட நமது கழகம் சட்ட மன்றம் நுழைய தேர்தல் களம் புகுந்து இருக்கிறது.

நாடு வாழ, நலிவு நீங்கத் தேர்தல் களம் நுழைந்துள்ள நமது கழகம், வழித்துணைக்கு உதய சூரியனைப் பெற்றிருக்கிறது:

கழகத்தின் உறுதுணையான உதயசூரியனை தமிழக மக்கள், சொந்தம் பாராட்டி வரவேற்கின்றனர் — வாழ்த்துகின்றனர்.

உதயசூரியன், தமிழக மக்களின் நித்தியநாதமாகிவிட்டது. இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் உதயசூரியன் குடிபுகுந்துவிட்டான்.

தமிழக வரலாற்றில் புதியதோர் அத்தியாயம், உதயசூரியன் உதவியால் தொடங்குகிறது.

மக்களாட்சி, தனது உண்மையான உருவில் செயல்படத் தொடங்குகிறது.

மக்களாட்சிப் பெயர் கூறி வலதுசாரி இடதுசாரி சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயன்று வரும் அரசியல் சூதர்களின் சதிச்செயல், உதயசூரியன் வரவு கண்டு சுக்குநூறாகச் சிதறுகிறது.

தங்கள் மக்களாட்சி முகமூடி உதயசூரியனின் செங்கதிர்களால் துணிக்கப்படுவது கண்டு, அந்தச் சர்வாதிகார அரசியல் எத்தர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது—எரிச்சலும் கொப்பளித்துக்கொண்டு கிளம்புகிறது.

முறை தவறுகின்றனர் — தடுக்குத்தனமாகத் தூற்றுகின்றனர் - ஏசுகின்றனர் -ஏளனம் பேசுகின்றனர்.

அச்சர்வாதிகாரப் பித்தர்களின் ஏசலும் ஏளனமும், உதயசூரியனின் ஒளியை மங்கச் செய்துவிடாது.

தனி மனித உரிமையைச் செயல்படுத்துவதும் செயல்பட விடுவதுமே, மக்களாட்சியின் மாண்பாகும்.

மக்களாட்சியின் அப்புனித மாண்பை, கடந்த பத்தாண்டுக் காலமாக, மந்தி கை மலரெனப் பிய்த்தெறிந்து வந்துள்ளனர் காங்கிரசு ஆளவந்தார்கள்.

சட்ட மன்றத்தில் வீற்றிருந்த எதிர்க்கட்சியினர் எனப்படுபவர்களோ, மக்களாட்சி மாண்பிற்கு மார்க்கம் காண்பவர்களன்று. மக்களாட்சி முறைபற்றிச் சளசளெனப் பேசி, அது தங்களுக்குக் கொடுத்த வாய்ப்பைக் கொண்டு அப்புனித முறைக்குக் கல்லறை கட்டும் நச்சு நினைப்புடையவராவர்.

நமது கழகத்தின் சட்ட மன்ற நுழைவு, வேண்டுமென்றே இழைக்கப்படும் இப்பேராபத்திலிருந்து மக்களாட்சி முறையைப் பாதுகாக்கப் பயன்படும். அத்துடன், மக்களாட்சி முறைக்குப் புதிய ஆக்கமும் கிடைக்கும்.

சென்னை சட்ட மன்றத்திற்கு 124 இடங்களில் நேரடியாகப் போட்டியிடுகின்றது.

6 இடங்களில் தனது ஆதரவைத் தர கழகம் முடிவுகட்டி இருக்கிறது.

டில்லி மக்கள் சபைக்கும் 11 இடங்களில், கழகத்தின் பெயரில் போட்டியிடப்படுகிறது.

5 இடங்களில் போட்டியிடும் நல்லறிவாளர்களுக்கு ஒத்துழைப்பளிக்க நமது கழகம் தீர்மானித்திருக்கிறது.

இன்னும் இரண்டொரு தொகுதிபற்றிய கழகத்தின் இறுதி முடிவு விரைவில் தெளிவாக்கப்படும்.

தேர்தலில் கலந்துகொள்ளும் கழகத்தவர்களில் தேவையான எண்ணிக்கையினருக்கு ஆதரவு தந்து, தமிழக மக்கள் வெற்றி பெறச் செய்வாராயின், ஆட்சிப் பொறுப்பேற்கும் வாய்ப்பும், குறைந்த எண்ணிக்கையினரை வெற்றிபெறச் செய்வாராயின் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக அமையும் வாய்ப்பும் நமது கழகத்திற்குக் கிட்டும். தேர்தல் முடிவு எத்தகைய வாய்ப்பை உருவாக்குவதாக அமைந்தபோதிலும், கழகம், தமிழ் மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையிலிருந்து பின்வாங்கப்போவது கிடையாது.

தேர்தலில் பங்கு கொண்டுள்ள நம் கழகத்தவர்களுக்குத் தமிழ் மக்களின் பேராதரவு நிச்சயமாகக் கிடைக்கும் என்ற திடநம்பிக்கை நமக்கிருக்கிறது. அந்த நம்பிக்கை பொய்த்துவிடாது என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரியவும் தெரிகின்றன.

எனவே, வெற்றி நமதே!
ஞாயிறு போற்றுதும்!
ஞாயிறு போற்றுதும்!

தி. மு. க. தேர்தல் அறிக்கை (Election Manifesto)

இந்திய யூனியனிலிருந்து பிரிந்து செல்ல உரிமை வேண்டும்

மத்திய ஆட்சியின் அதிகாரங்களுக்கு வரம்பு கட்ட வேண்டும்

மாநிலங்களுக்கு அரசியல் சமத்துவம் வேண்டும்

அன்பர்களே!

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி எழு ஆண்டுகள் கழிந்த பிறகு, எட்டாவது ஆண்டு நடப்பில் முதன் முறையாகப் பொதுத் தேர்தலில் ஈடுபடுகிறது. இது, கழகத்தின் வரலாற்றில் மட்டுமின்றி நாட்டின் அரசியல் வரலாற்றிலும் ஒரு முக்கியமான கட்டமாகும்.

கடந்த ஒன்பதாண்டு காலமாக ஆட்சியில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி, சட்டசபையிலும் மக்கள் சபையிலும் ஒரு வலுவான எதிர்க்கட்சி அமையாது செயல்பட முடியாதவாறு தன்னிடம் கிடைத்துள்ள அதிகாரத்தின் துணைகொண்டு மெய்யான ஜனநாயக ஆட்சி ஏற்படவொட்டாமல் தடுத்து, எதேச்சாதிகாரமாக ஆண்டு வருகிறது. திராவிடத்தின் விடுதலை வேண்டிநிற்கும் கழகம் தேர்தலில் ஈடுபட்டு முழுப்பலன் காணமுடியாது என்ற கருத்தில் கடந்த தேர்தல்கள் அனைத்திலும் நேரிடைப் பங்குகொள்ளாமல் இருந்துவந்தது. இது, காங்கிரசின் எதேச்சாதிகார எண்ணத்தை நிறைவேற்றப் பெரிதும் சாதகமாய் அமைந்தது. மேலும் கழகம் நாட்டு மக்களிடையே ஏற்படுத்திய விடுதலை வேட்கையுணர்ச்சியும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியும் தேர்தல் நேரத்தில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட பல சுயால சுயேச்சைகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தன. வெற்றி பெற்றபின், அந்தச் சுயேச்சைகளை மிக மலிவாகக் காங்கிரஸ் தன் அணிக்கு இழுத்துக்கொள்வது எளிதாக அமைந்தது. இந்நிலை, காங்கிரசை எவரும் எப்போதும் எதிர்க்கவே முடியாது என்ற எண்ணத்தையும், அந்தக் கட்சியின் ஆட்சியேதான் என்றும் நிலைத்திருக்குமோ என்ற அச்சத்தையும் பெரும்பாலான மக்களுக்கு ஊட்டியது. இந்த அச்சம் நாளடைவில் மெய்யான ஜனநாயகம் உருவாவதற்குப் பெருந்தடையாக இருக்குமே என்ற கவலையில், கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவினை மேற்கொண்டு, இதுவரை தான் இயங்கிவந்த நிலையில் ஒரு மாற்றத்தைக் கண்டுள்ளது.

சுயநிர்ணய உரிமை வேண்டும்

இந்திய அரசியல் சட்டம் உரிமை வழங்கும் சாசனமாக அமையாமல், பெரிதும் உரிமையை மறுத்து வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அரண் செய்யும் சட்டத் தொகுப்பாக உள்ளது. இந்திய யூனியனில் பிணைக்கப்பட்டிருக்கும் எந்த மாநிலமும் வெளியேற வெளியேறியபோது, இந்திய யூனியன் எனும் அமைப்பில் இணைவதற்கான விருப்பு வெறுப்பைத் தெரிவித்துக்கொள்ள வாய்ப்பே பெறவில்லை. அடுத்து யூனியன் அமைப்பிலிருந்து ஏதாவதொரு மாநிலம் பிரிந்து செல்ல விரும்பினால், பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் சம்மதித்தால்தான் பிரிந்து செல்லமுடியும் என்ற விதியினை அரசியல் அமைப்பு ஏற்படுத்திக்கொண்டுள்ளது. எனவே, அரசியல் அமைப்பில் செய்யப்படவேண்டிய முதல் மாற்றம், எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் உரிமையை தானே பெற்றிருக்க வழிசெய்வதுதான்.

அரசியல் சமத்துவம் வேண்டும்

அடுத்து, இன்று இந்திய யூனியனில் மாநிலங்கள், மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் பிரிக்கப்படாமல், பெரும்பாலும் மொழி, கலாச்சார அடிப்படையிலே பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அநீதியின் விளைவாகப் பெரிய மாநிலங்களாக விளங்கக்கூடிய வகையில் எண்ணிக்கையில் பெருத்துள்ள சில இனத்தவர், சிறிய மாநிலங்களாக அமைந்துள்ள வேறு இனத்தவர்மீது ஆதிக்கம் செலுத்த இடமேற்படுகிறது. நடைமுறையும் அப்படியே உள்ளது. அரசியல் சமத்துவம் இல்லாத ஆட்சியில் ஒரு சாரார் ஆதிக்கக்காரர்களாகவும் பிறிதொரு சாரார் அடிமைகளாகவும் தான் இருக்க முடியுமே தவிர, எல்லா மக்களும் சுதந்திரமும், சமத்துவமும் பெற்றவர்களாக இருக்க முடியாது. எனவே, மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும், பெரியதோ சிறியதோ, ஒரே அளவு பிரதிநிதித்துவ உரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

மத்திய ஆட்சி அதிகாரங்களுக்கு வரம்பு வேண்டும்

அடுத்து, இன்றைய அமைப்பில் அதிகாரங்களும் வருவாய்களும் மத்திய ஆட்சிக்கே பெரிதும் அளிக்கப்பட்டுள்ளன. மாநில ஆட்சியில் வருவாய் பெருக வழியின்றியும் சாதாரணப் பிரச்சினைகளில் கூட முடிவெடுக்க முடியாமலும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மாநிலங்களின் அதிகார வரம்பும் வரி விதிப்பு உரிமைகளும் வெகுவாக அதிகரித்து, மத்திய ஆட்சியின் அதிகாரங்களுக்கும் வரிவிதிப்பு உரிமைகளுக்கும் வரம்பு கட்டப்படுதல் வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

தொழில்கள் தேசியமயமாக வேண்டும்

தொழில் துறையில் இன்று நிலவும் தனியார் ஆதிக்கம் நாட்டு மக்கள் அனைவருடைய நலன்களுக்கும் நலவாழ்வுக்கும் பெருங்கேடாக அமைந்துள்ளது. உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்படும் அந்த நாள் தான், நாட்டு மக்களின் துயர் துடைக்கும் நாளாக அமையும் எனக் கழகம் கருதுகிறது. இந்த இலட்சியத்தை நிறைவேற்ற வாயளவோடன்றி மனப்பூர்வமாகப் பாடுபடும் அரசே மக்கள் நல அரசாகத் திகழமுடியும். ஐரோப்பா, அமெரிக்கா போன்று, பெரும் அளவில் தொழில் மயமாகாத இன்றைய நிலையில், இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவது மிகவும் எளிதாகும். தனியார் இன்னும் பிரவேசிக்காத தொழில்துறைகள் ஏராளமாக உள்ளன. அந்தத் துறைகளில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்துவதும் கூடவே படிப்படியாக ஏற்கனவே உள்ள துறைகளையும் தேசியமயமாக்குவதும் இலட்சிய வெற்றியைக் கொடுக்கும். அத்துடன், அன்னிய முதலாளிகளின் இலாபத்தை உயர்ந்த பட்சம் கட்டுப்படுத்தி, அதை இந்நாட்டிலேயே பரவலாக முதலீடு செய்ய முழுமூச்சுடன் முயற்சிக்கப்படும்.

ஐந்தாண்டுத் திட்ட அநீதி ஒழிய வேண்டும்

இந்தியாவின் அபிவிருத்திக்கு என்று மத்திய சர்க்கார் தீட்டியுள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரிதும் வடநாட்டின் வளத்தைப் பெருக்கவும் வடவரின் வாழ்வு ஒன்றினையே நோக்கமாகக்கொண்டும் தீட்டப்பட்டுள்ளன எனக் கழகம் கருதுகிறது. இத்திட்டங்களின் மூலம் நீர்ப்பாசன, மின்சார உற்பத்தி ஆகிய துறைகளில் மிகப் பெரும்பாலான திட்டங்கள் வடநாட்டிலேயே இடம் பெற்றுவிட்டன. மற்றும், அரசே தொடங்கும் பெரும் கனரகத் தொழில்களும், தனியார் வசமுள்ள பெருந் தொழில்களுக்கான உதவியும் ஊக்கமும் வடவருக்கே வழங்கப்பட்டுள்ளன. திராவிடம் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை, எவரும் இனி மறுக்கவோ மறைக்கவோ இயலாது. எடுத்துக்காட்டாக, சேலம் பகுதிகளில் வளமான இரும்புக் கனிகள் மிகுந்து இருந்தும், இரும்பு, உருக்குத் தொழில்கள் தெற்கே உறுதியாகத் தொடங்கக்கூடாது என்ற எண்ணத்தையே டில்லிப் பீடம் செயல்படுத்தி வருகிறது. சேலம் பகுதிகளில் 'பாக்சைட்' என்னும் கனிப் பொருளும் மிகுதியாகக் கிடைக்கிறது. இவ்வாறு, பெரும் கனரகத் தொழில்களுக்கான வளங்கள் ஐயப்பாட்டிற்கு இடமில்லாதவகையில் பெருகியிருந்தும், இவைகளை அடிப்படையாக வைத்துத் தொழில் திட்டங்கள் வகுக்காமலிருக்கும் போக்கில் ஏற்படும் பெரும் மாற்றம் ஒன்றேதான், தென்னாட்டவரின் பொருளாதாரத்தை வளப்படுத்தும்.

நெய்வேலித் திட்டம் போன்ற ஓரிரு உருப்படியான திட்டங்கள் கூட மத்திய நிர்வாகத்தில் உரிய வேகத்தில் வளராமல், ஆமை வேகத்தில் நகர்ந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றன. திட்டங்களை நிறைவேற்றும் முழுப் பொறுப்பையும் அந்தந்த மாநில ஆட்சிகளே ஏற்று நடத்தினால்தான், திட்டங்கள் ஒழுங்குற, உரியகாலத்தில் நிறைவேறி, மக்களுக்குப் பயன்தரத் தொடங்கும்.

அதிகபட்ச ஊதியத்திற்கு வரம்பு

குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறும், அதிகபட்ச ஊதியத்திற்கும் குறைந்தபட்ச ஊதியத்திற்குமிடையே உள்ள விகிதம் பன்னிரண்டு மடங்கு எனவும் அமையும் சமுதாயத்தைக் காண்பதற்கான வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். நாடு முழுவதும் தொழில்மயமாக்குவதற்கு முயன்றாலொழிய முன்னேற்றத்திற்கு வேறு வழியில்லை. நாட்டின் ஒரு பகுதி புறக்கணிக்கப்பட்டு ஒரு பகுதியில் மட்டும் முன்னேற்றம் ஏற்பட்டால் இது சாத்தியமாகாது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு பகுதியில் குறைந்து, மற்றொரு பகுதியில் பயங்கரமாகப் பெருகியும் தான் காணப்படும்.

நிலச் சீர்திருத்தம்

காங்கிரஸ் ஆட்சி தயங்கித் தயங்கிக் கொண்டுவரும் பல்வேறு நிலச் சட்டங்களும் சமூகத்தில் நிலவும் நல்லுறவுகளைக் கெடுத்துப் புதிய குழப்பங்களை ஏற்படுத்தவே துணை புரிந்துள்ளன. நில உடைமைக்கு வரம்புகட்டும் சட்டத்தைத் துணிந்தும் திட்டவட்டமாகவும் நிறைவேற்றுவதொன்றே, குழப்பங்கள் நீங்கவும் உணவு உற்பத்தி பெருகவும், சமூக நீதி நிலைநாட்டவும் உதவும்

விவசாய முன்னேற்றம்

அடுத்து, விவசாயத் துறையில் கூட்டுறவு இயக்கம் மிக அதிகமான அளவில் விரிவடைய வேண்டும்,

(8-ம் பக்கம் பார்க்க)

ஐந்தாண்டுத் திட்ட அநீதி ஒழிய-
இந்தித் திணிப்பு தடுக்கப்பட-
'தமிழ்நாடு' எனப்பெயரிட

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கால்நடைப் பண்ணை, பால் பண்ணை, கோழிப் பண்ணை, விற்பனைச் சங்கங்கள் ஆகிய துறைகளிலும் கடன் உதவி தருவதிலும் கூட்டுறவு இயக்கம் பெருமளவில் பரவிப் பணிபுரிந்தால், நமது மனிதர்களின் தொல்லை இலாபக் கொடுமைகளிலிருந்து உழவர்கள் விடுபட்டு உழைப்பின் முழுப் பலனையும் பெற்று உணவு உற்பத்தியில் நல்ல உற்சாகம் காட்டுவர்.

மீன் உற்பத்தி

பரந்த கடல்கள் சூழ்ந்திருந்தும் மீன் பிடிக்கும் தொழில் மிகக் கேவலமான நிலையில் பயனற்று நசித்து வருகிறது மீன் பிடிக்கும் தொழில் இன்னும் புராதன முறைகளிலேயே நடைபெற்று வருகிறது. மீன் பிடிக்கும் மோட்டார் படகுகளும் வேறு வகையான நூதனக் கருவிகளும் இத்துறையில் புகுத்தப்பட்டால், மீனவர் வாழ்வு மலர்வது மட்டுமேயன்றி நாட்டு மக்கள் அனைவர்க்கும் மலிவாகவும் ஏராளமாகவும் மீன் கிடைக்கும் சத்தான உணவுப் பொருளான மீன் ஏராளமாகக் கிடைக்கச் செய்ய இதுவே வழியாகும்

கல்வி

அனைவருக்கும் பத்தாவது வகுப்புவரை (செகண்டரி கட்டம்வரை) இலவசக் கல்வியை அளிப்பதென்பது நமது நாட்டின் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானதொரு கட்டமாகும். விரும்பினால் இதை நிறைவேற்ற மார்க்கம் உண்டு காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகவே உருவாக்கப்பப்பட்ட பல பயனற்றத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் விரையமாகிக்கொண்டு வருகின்றன. போலீஸ் இலாகாவில், ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு முயற்சியும் இல்லாவிட்டாலும் மந்திரிகளின் பாதுகாப்புக்கும், ஆர்ப்பாட்ட ஆரவார அலங்காரங்களுக்கும் போலீஸ் இலாகாவின் பெயரால் பல கோடி ரூபாய்கள் விரையமாகிக்கொண்டு வருகின்றன இதுபோன்று விரையமாகும் பொருளை வைத்துக்கொண்டு பத்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி அனைவருக்கும் அளிக்கமுடியும்.

அடுத்து, கட்சி அரசியல். மத, வகுப்பு உணர்ச்சிகள் திணிக்கப்படாததும் அறிவு வளர்ச்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டதுமான கல்விதான் மெய்யான பயன்படும் கல்வியாகும். பெண்கள், சிறு குழந்தைகள், ஊமைகள், செவிடர்கள், குருடர்கள் ஆகியோருக்கும் அவரவர்களுக்குரிய முறையில் கல்வி அளிக்கும் வசதிகள் விரிவாக்கப்படவேண்டும். விஞ்ஞான, தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் தேவைக்கேற்பப் பெருக வேண்டும்

தாய் மொழியில் போதனை

கல்வி பல கட்டங்களிலும் தாய் மொழியிலேயே அளிக்கப்படல் வேண்டும். கல்விப் பணி புரியும் ஆசிரியர்களின்—அதிலும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்படாமல் கல்வியின் தரம் உயருமென்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவே ஆகும்.

இந்தித் திணிப்பு

கல்வித் துறையில் இந்தி மொழி வெறி புகுந்து அட்டகாசம் புரிந்து கொண்டிருக்கிறது உலகத் தொடர்புக்கும் விஞ்ஞான, தொழில் நுணுக்க, தத்துவ, வரலாற்றுப் பொருளாதார அறிவு பெறவும் ஆங்கிலம் இன்றியமையாததொன்று. ஆங்கில மொழி பயிற்றுவிப்பதில் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். தாய்மொழி அறிவு மிகுந்து விளங்க அதற்கு உரிய இடம் ஒதுக்கப்படல் வேண்டும்.

மற்றப்படி, இந்தித் திணிப்பு ஒரு சாராரின் அரசியல் ஆதிக்க வெறியினையே பிரதிபலிக்கிறது அதற்கு இடமளிப்பது பெருந்தீமை பயக்கும். திராவிட மக்களின் மொழி, கலை, நாகரீகம், வரலாறு ஆகிய துறைகளில் ஆராய்ச்சி நடத்தி, உண்மை நிலைகளைத் துலக்குவதற்கென்றே ஒரு தனித் திராவிட ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் படவேண்டும்.

சமவேலைக்குச் சமஊதியம்

மற்றும், அரசின் நிர்வாகத்தில் பணிபுரிவோர்களிடையே இன்று மாபெரும் அநீதி ஒன்று நிலவுகிறது. ஒரே பணியில் இருப்பினும் மத்திய அரசில் பணிபுரிவோர்க்கு ஓரளவு ஊதியமும் மாநில அரசில் பணி புரிவோர்க்கு மிகக் குறைந்த ஊதியமும் அளிக்கப்படும் அநீதி ஒழிக்கப்பட்டு, ஒரே பணியுரிவோர்க்கு, எந்த அரசியலாயினும், நிம்மதியான வாழ்க்கை நடத்துவதற்கேற்ற ஒரே அளவு ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

அடிப்படைச் சம்பளமாக்க வேண்டும்

ஏதோ நெருக்கடியான சில நேரங்களில் மட்டுமேதான் பஞ்சப்படி தருவது முறை. யுத்த காலத்தில் விலைவாசிகள் திடீரென உயர்ந்ததால் பஞ்சப்படி தரப்பட்டது யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளாகியும் விலைவாசிகள் இறங்கவில்லை. இந்த நிலையில் இன்னும்பஞ்சப்படி தரும் முறை வெறும் கேலிக்கூத்தாகவே உள்ளது. எனவே, பஞ்சப்படி என்பதை சம்பளத்தோடு சேர்த்து, முழுவதையும் அடிப்படைச் சம்பளமாகவே பாவித்து அளிப்பதே முறையாகும்.

கிராம ஊழியர்

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஒருபுறம் ஏராளமான பொறுப்புகளும் வேலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டும், மறுபுறம் அவைகளை ஒழுங்குற நிறைவேற்ற வசதிகளும் உரிய ஊதியமும் தரப்படாத நிலை நிலவுவதும் அநீதி என்பதோடன்றி, நாட்டிற்குப் பல்வேறு வகையான இழப்புகளும் நேரிடுகின்றன. கிராம உத்தியோகஸ்தர்களின் நிலை தெளிவாக்கப்படுவதுடன், வேலைகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஏற்ற ஊதியமும் வசதியும் அளித்தல் அவசியமாகிறது.

கடல் கடந்தத் தமிழர்கள்

இலங்கை, பர்மா, மலாயா போன்ற நாடுகளில் பஞ்சம் பிழைக்கச் சென்றுள்ள தமிழ் மக்களுள், அந்தந்த நாடுகளில் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டவர்கள் நீங்கலாக, தாய்நாடு திரும்ப விரும்பும் மற்ற அனைவரையும் அழைத்து, அவர்களுக்கான வாழ்க்கைப் பாதுகாப்பைத் தேடித்தர வேண்டும். தமிழர்கள் நிறைந்துள்ள வெளிநாடுகளில் தமிழர்களே தூதவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

இராணுவச் செலவு வெட்டப்பட வேண்டும்

இராணுவத்திற்கென்று இந்திய அரசு, தனது வருவாயில் பாதிக்கும் மேலாகப் பொருளைச் செலவிடுவது தேவையற்றதாகும். இராணுவச் செலவைக் குறைத்து, அந்தப் பொருளை இதர அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடுவதே முறையாகும்.

தொழிலாளர்

தொழிலாளர்கள் நீதியும் நிம்மதியும் பெறவேண்டும் என்பதுதான் கழகத்தின் நோக்கம். 'சக்திக்கு ஏற்றபடி உழைப்பு, தேவைக்கு ஏற்றபடி வசதி' என்ற நிலைமை ஏற்படவேண்டும். தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி, வைத்திய வசதி, ஓய்வு நேர வசதி ஆகியவை போதுமான அளவுக்கு எல்லாத் துறைகளிலும் ஏற்படவேண்டும் கடந்த பத்தாண்டுக் கால ஆட்சியிலே தென்னாட்டு மக்களுக்கு நிம்மதியான வாழ்வளிக்கத் தவறியிருக்கும் காங்கிரஸ் ஆட்சியினர், தென்னாட்டுத் தொழிலாளரின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்யக்கூடிய உத்தரவாதம் அளிக்கவில்லை. அடுத்து நடத்தப் போகும் ஐந்தாண்டுத் திட்டங்களிலே வடநாட்டுத்தொழிலாளரின் வளர்ச்சியும் பாதுகாப்பும் வளர்கின்ற அளவுக்கு தென்னாட்டுத் தொழிலாளரின் நிலை முன்னேறவில்லை. இந்த அநீதியை வன்மையாகக் கண்டிப்பதுடன், தென்னாட்டுத் தொழிலாளரின் நிலை உயர ஆவன செய்யவும் தன்னால் முடியும என்றும் உதரவாதமளிக்கிறது. இலாபத்தில் பங்கு கோருவதென்பது தொழிலாளர் உரிமைகளின் ஒரு கூறுமட்டுமே ஒழிய, முழு உரிமையையும் எடுத்துக் கொள்வதாகிவிடாது. ஆகவே தொழிற்சாலையின் அடிப்படை மூலதனத்திலும் நிர்வாகத்திலும் தொழிலாளரின உரிமைப் பயணம் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

கைத்தறிக்குப் பாதுகாப்பு

தென்னாட்டில் கைத்தறித் தொழிலை மேற்கொண்டு, வாழ்ந்து வரும் இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளருக்குத் தகக பாதுகாப்பு தேடித் தரவேண்டியது அவசியமாகும். கரைபோட்ட வேட்டிகளையும் சேலைகளையும் கைத்தறிக்கே ஒதுக்கிக் கொடுத்தால்தான் கைத்தறியாளரின் அவதி நீங்க வழிபிறக்கும். ஏற்றுமதியை அதிகரிக்க ஆன வழிகளையெல்லாம் அரசாங்கம் ஆராயவேண்டும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் விசைத்தறியைப் புகுத்துவது தனிப்பட்ட சில முதலாளிகளை வளர்ப்பதற்கும், ஏழை நெசவாளர்களைச் சீரழிப்பதற்கும் காரணமாக இருக்குமாதலால் விசைத்தறி இப்பொழுது எவ்வகையிலும் புகுத்தப் படக்கூடாது.

விற்பனை வரி

வியாபாரத் துறையில் நாணயமும் நேர்மையும், உண்மையும் மானமும் காப்பாற்ற முடியாத அளவுக்குப் பலகட்ட விற்பனை வரிகளும், அவை பற்றிய சட்ட விதிகளும் வியாபாரிகளைப் பெரிதும் வருத்தி வருகின்றன வியாபாரிகள் நேர்மையாக வியாபாரம் நடத்த, அரசாங்கத்தின தேவையற்ற கட்டுப்பாட்டு விதிகள் அகற்றப்படவேண்டும். விற்பனை வரிகளைப் பல கட்டங்களில் வசூலிப்பதைவிட ஒரு முனையில் விதித்து, வியாபாரிகளும் பொதுமக்களும் தாங்கக்கூடிய விதத்தில் வசூலிப்பதே ஏற்றது.

தமிழ் நாடு

தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி போன்ற தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படுவதற்கும், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடப்படுவதற்கும் முயற்சிக்கப்படும். இருமொழி, மும்மொழி, மாநில அமைப்பு ஏற்பாட்டினை எதிர்த்துப் போராடும்.

தென்னாட்டில் பூதத்துவ ஆராய்ச்சி

தெற்கே உருவான வகையில் பூதத்துவ ஆராய்ச்சியினை அரசு மனப்பூர்வமாக மேற்கொண்டால், புதிய பல வளங்கள் தட்டுப்படும்; தொழில்களுக்கான வாய்ப்புகளும் பெருகும்.

மேற்கண்டவைகளுக்காகக் கழகம் பாடுபடுவதுடன், சமுதாயத்தில் நிலவும் சாதிமுறைக் கேடுகளை ஒழித்து, சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண்பதற்கும், திராவிட நாட்டின் அரசியல் சுதந்திரத்தை உருவாக்கவும், சமதர்மக் குடியரசைக் காணவும் தொடர்ந்து போராடக் கழகம் உறுதி பூண்டுள்ளது

இன்றையத் தென்னகத்தின் அரசியல் சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் (சென்னை) மாநில ஆட்சிமன்றத்தில் ஒரு வலுவுள்ள எதிர்க்கட்சியாக அமர்வதற்கேற்ற தகுதியும் திறமையும், வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிறது. கழகத்தைச் சேர்ந்த அறிவும் ஆற்றலும், நாணயமும் நேர்மையும், உண்மையும் உறுதியும், நாட்டின் நலன்கள் குறித்து வாதிடும் வல்லமையும், தேவைகளை வற்புறுத்திக் கேட்கும் தன்மையும் பெற்ற செயல் வீரர்கள் பலர் பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடுகிறார்கள். நாடு வாழவும் நலிவு போகவும், உண்மையான மக்களாட்சி மலரவும் சமதர்மம் தழைக்கவும், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களை ஆதரித்து, அவர்களைச் சட்டமன்றத்திற்கும் மக்கள் சபைக்கும் அனுப்பிவைக்குமாறு, வாக்காளர்களே, உங்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே வாக்களியுங்கள்

தமிழ் நாட்டில் திட்டங்கள் அமுலாகும் இலட்சணம்

மக்கள் சபைக் குழு தரும் 'சர்டிபிகேட்'

புதுடில்லி, பிப். 6—

சென்னை மாநிலத்தில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் ஆகியவை வெற்றிபெறவில்லை.

"காங்கிரஸ் ஆட்சியில் அத் திட்டங்கள் அமுலாகும் இலட்சணம், ஏமாற்றம் தருகிறது"

என்று, மக்கள் சபை மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து 'சர்டிபிகேட்' பெற்றிருப்பதிலிருந்து தெரியவருகிறது.

"திட்டங்களை அமுல் செய்யும் பொறுப்பிலிருப்பவர்கள், போதுமான அக்கரை காட்டவில்லை. மக்களும், இத்திட்டங்கள் குறித்து உற்சாகம் காட்டவில்லை; காட்டியிருந்தால் இதர மாநிலங்களைப்போல திட்டங்கள் வெற்றிகளைப் பெற்றிருக்கும்" என்றும் குழு கருத்தறிவித்திருக்கிறது.

"இந்தத் திட்டங்களை அமுல் செய்வதிலும், நிறைவேற்றுவதிலும் மாநிலத்திற்கு மாநிலம் பெரும் ஏற்றத் தாழ்வுகள்—வித்தியாசங்கள் இருக்கின்றன" என்றும் குழு கூறியிருக்கிறது.

★

அவசரப்பட்ட முடிவாம்!

மக்கள் தாமாகவே ஒத்துழைப்பு தந்தனராம்!

சென்னை, பிப். 8—

'சென்னை மாநிலத்தில் சமூகநலத் திட்டங்கள் அமுலாகும் இலட்சணம் குறித்து மக்கள் சபைக் குழு தெரிவித்துள்ள கருத்து அவசரமான தீர்ப்பு!"

அந்த இலாகா பொறுப்பேற்றுள்ள மந்திரி பக்தவத்சலம் இப்படிக் கூறியிருக்கிறார்.

'மாறாக, திட்டத்திற்கு மக்கள் தம்மிச்சையாக மனமுவந்து ஒத்துழைப்புத் தந்தார்கள்' என்றும் மந்திரி கூறினாராம்.

உண்மையில் திட்டத்திற்குப் போதுமான பணம் ஒதுக்கவில்லையே என்றுதான் குறை எழுந்தாம்—மந்திரி கூறியிருக்கிறார்!

குறிப்பிட்டபகுதியில் குவியலாக அமைந்துள்ள சிறுதொழில்களுக்கு தொழில்நுட்ப உதவியாம்

தென் பகுதிக்குக் கிடைக்கும் உதவியின் இலட்சணம்!

நாட்டில் குறிப்பிட்டதோர் இடத்தில் குவியலாக அமைந்துள்ள சிறு தொழில்கள், அல்லது அத்தொழில்களின் தொகுதிகள் ஆகியவற்றுக்கு உதவுவதற்காக 34 தொழில் துறை 'விஸ்தரிப்பு' நிலையங்கள் இந்தியப் பேரரசால் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை, தனிப்பட்ட உற்பத்தியாளர்களுக்குள்ள பொதுப்பட்ட தொழில் நுட்ப பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க உதவுமாம்.

மேலும் 15 நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் பரிசீலனையில் இருந்துவருகின்றனவாம்; இரண்டாவது திட்ட காலத்தில், முதல் இரண்டு ஆண்டுகளில் இதுபோன்ற 60 நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

தொழிலாளர்களுக்கு நவீன உற்பத்தி முறைகளிலும், நிர்வாக முறையிலும், விற்பனை ஏற்பாட்டிலும் பயிற்சியளிக்கப்படுமெனக் கூறப்படும் இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் சராசரி ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள இயந்திர சாதனங்களும், கருவிச் சாதனங்களும் வைக்கப்பட்டிருக்குமாம்.

அமைக்கப்படவிருக்கும் 49 நிலயங்களில் வடக்கு, தெற்கு, மேற்கு பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வடக்குப் பகுதியில் தச்சுத் தொழில், கருமார் தொழில், மிதியடி உற்பத்தித் தொழில், ஆட்ட சாதனங்கள், வார்ப்படச்சாலைகள், சைக்கிள் பாகங்கள் முதலிய சிறு தொழில்களுக்கு நிலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தென் பகுதியில் எஞ்சினீயரிங், வார்ப்படசாலை, துருவேறுத உருக்கு, தோல், மிதியடி உற்பத்தித் தொழில்களுக்கு நிலையங்கள் அமைக்கப்படும்.

மேற்குப் பகுதியில் அமைக்கப்படும் நிலயங்களில், கருமார் தொழில், வார்படச்சாலை, தச்சுத் தொழில், மின்சார முலாம் பூச்சுத் தொழில், கடிகார உற்பத்தி முதலிய தொழில்களுக்கு உதவியளிக்கப்பட்டுவரும்.

டில்லி, பஞ்சாப், இராஜஸ்தான் ஆகியவை அடங்கியுள்ள வட பகுதியில் 1956 நவம்பர் மாதத்தில் 18 தனியார் கம்பெனிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிறப்பு மாநாடு: ஓர் படப்பிடிப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

காக மகளிர் மன்றத்தின் சார்பில் ரூ 1,330-ஐ பொதுச்செயலாளர் அவர்களிடம் வழங்கினர்.

எஸ். எஸ். ராசேந்திரன்

தனது தொகுதி நிலவரத்தை எடுத்துரைத்த இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் 'தமிழ் மக்கள் தி. மு. கழகத்தினருக்கே வாக்களிக்க வேண்டும்,' என்பதை எடுத்துரைத்தார்.

கே. ஏ. மதியழகன்

வரப்போகும் தேர்தல், ஐந்தாண்டுக்கான எதிர்காலத்தை, நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகிறது என்பதை விளக்கி, 'வாக்காளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்; காங்கிரசாரின் எதேச்சாதிகாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும்,' என்று எடுத்துரைத்தார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பின்னர் பேசிய தோழர் ஏ. வி பி ஆசைத்தம்பி அவர்கள், இந்த நாடு சுதந்திரம் பெற்றுல் அன்றி சுபீட்சமடைய முடியாது என்பதை விளக்கி, தேர்தல் காலத்தில் கழகத் தோழர்களின் கடமையை விளக்கினர்.

மு. கருணநிதி

'கண்ணீர்த் துளிகள் ஒழிய வேண்டும் என்கிருர், பெரியார்; நாமும் அதைத்தான் சொல்கிறோம்; நாட்டு மக்களின் முகத்தில் வழிந்தோடும் கண்ணீர்த்துளிகள் ஒழியவேண்டும்; மக்கள் முகத்தில் மகிழ்ச்சி பிறக்கவேண்டும் என்கிறோம் நாம்,"

என்று முழக்கமிட்டார், அடுத்துப் பேசிய தோழர் மு. கருணநிதி அவர்கள்.

ஈ. வெ. கி. சம்பத்

"பலமான — பரிசுத்தமான எதிர்க்கட்சி அமைந்தாலன்றி சனநாயகம் நடைபெருது; நாட்டு மக்கள் சனநாயகத்தின் பலன்களை அனுபவிக்க முடியாது"

என்பதை விளக்கினர், தோழர் ஈ. வெ. கி. சம்பத்.

தொடர்ந்து முழக்கமிட்ட அவர், தி. மு. கழகத் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டுள்ள திட்டங்கள் நியாயமானவை – தேவையானவை —சாத்தியமானவை என்பதையும் விளக்கினர்.

அண்ணு

இறுதியாக, அண்ணு அவர்கள், ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த மக்களின் ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து 'இந்த மக்கள் வெள்ளத்தைக் கண்ட பிறகும் நம்மைப் பற்றித் தெளிவு பெருதவர்களுக்கு 'ஆண்டவன்' தவிர அண்ணுதுரையால் தெளிவு தேடித்தர முடியாது' என்று துவக்கி, 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்று முழக்கினர்கள்.

"எங்களுக்குப் புதிய அந்தஸ்து தேடிக்கொள்ள அல்ல, தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவது; தமிழ் நாட்டிற்குப் புதிய அந்தஸ்தைத் தேடித் தருவதற்காகத்தான்.

"குட்டக் குட்ட குனிபவர்கள் தமிழர்கள் என்றிருக்கும் பழியைத் துடைத்து, 'மறக்குடிப் பிறந்தவர்கள்—மாவீரர்கள் தமிழர்கள்' என்ற பெருமையை நிலைநாட்டிக்கொள்ள, தமிழர்களுக்கு அரியதோர் வாய்ப்பு தேர்தல்! தங்கள் 'தலை விதி'யை எழுதப்போகும் தலைசிறந்த எழுத்தாளர்கள், இதோ இருக்கிருர்கள்; இவர்கள், மார்ச் முதல் தேதியிலிருந்து தரப்போகும தீர்ப்பு, நிச்சயம், தமிழகத்திற்கு நல்ல எதிர்காலத்தை - அந்தஸ்தைத் தேடித் தரும் என்று நான் நம்புகிறேன்,"

என்றும், அண்ணு அவர்கள் முழக்கமிட்டார்கள்.

அண்ணு அவர்களது சொற்பொழிவில் வழக்கம்போல், நாட்டு அரசியல் நிலைகளைப் பற்றிய அரிய கருத்து விளக்கங்கள் இடம் பெற்று, கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்குப் பயன் அளித்தது.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டு மாநாடு இரவு 10 மணியளவில் இனிதே கலைந்தது.

தேர்தல் நிதி

பெரம்பூர் இரயில்வே தொழிற்சாலை ஊழியர்கள் சார்பில் ரூ 800 தி. மு கழக தேர்தல் நிதியாக அளிக்கப்பட்டது.

இன்னும் பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பிலும், தேர்தல் நிதி தரப்பட்டது—(விபரங்கள் பின்னுல்).

மாநாடு குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது என்ருலும், மகத்தான வெற்றியைப் பெற்றது; தி மு. க. தேர்தல் அறிக்கையைப் பிரகடனப்படுத்திப் பெருமை பெற்றது.

கொட்டும் பனியில், குழந்தைகளோடு ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு, மாநாட்டிற்கு வெற்றியும் பெருமையும் தேடித்தந்தனர்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் ஊழல்கள்

இலக்குமணபுரி, பிப். 10—

பொதுத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதையே தங்கள் குறிக்கோளாகக்கொண்டு, தங்கள் கட்சியின் ஊழல்களுக்குத் திரையிட்டுப் பாமரமக்களை ஏமாற்றும் நோக்கத்துடன், காங்கிரசுக் கட்சி கையாண்டுவரும் தேர்தல் பிரச்சார ஊழல்கள் குறித்தச் சில 'ருசிகர'த் தகவல்கள் கீழே தரப்படுகிறது.

அமெரிக்கா நன்கொடையாக அளிக்கும் பால் பவுடர், வெண்ணெய் போன்றவற்றைக் காங்கிரசார் தங்கள் தொகுதியில் தங்கள் சொந்தச் செலவில் தருவதுபோலவே விநியோகித்து ஓட்டுக் கேட்கிருர்களாம்!

காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு நாட்டில் உள்ள பெரும் பெரும் பண மூட்டைகளும் முதலாளிகளும் ரூ. 6 கோடி அளித்துள்ளார்களாம்!

உ. பி. மாநிலத்தில் மட்டும் காங்கிரஸ், 100 ஜீப் கார்கள் வாங்கியுள்ளதாம்!

காங்கிரஸ் அபேட்சகர்கள் அனைவரும் சட்டப்படி எவ்வளவு ரூபாய் செலவு செய்யலாமோ அதைவிட அதிகமாகவே தேர்தல் நிதி சேர்த்துள்ளனராம்!

பொதுவாகத் தேர்தல் சமயத்தில் எந்த அரசாங்கமும் புதிய திட்டங்களை மேற்கொள்வதில்லை. ஆனுல், உ. பி-யில் மட்டும் சென்ற தினங்களில் 10 புதிய திட்டங்களுக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்!

இந்நூர் மாநாட்டில் தேர்தல் பிரச்சாரம் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்று வெளியிடப்பட்ட கருத்து வெறும் வாய்ப்பேச்சாகவே முடியும் வகையில், கீழ்த்தரமான முறையிலும், சில இடங்களில் வகுப்புவாதங்களைக் கிளப்பிவிட்டும் வெற்றிபெற காங்கிரஸ் முயற்சித்து வருகிறதாம்.

இந்த உண்மை நிரம்பிய தகவல்களை, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் செயலாளர் அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்.

இதுவும் கூடத்தான்...!

"காங்கிரஸ் அரசாங்கத்தின் சாதனைகள் உருப்படியான துறையில் ஒன்றும் அமைந்திருக்கவில்லை; வேலையிலலாத் திண்டாட்டம் இன்று நாடெங்கும் பரவிப் பெருகிவிட்டது. 1952-ல் இருந்ததைவிட 1956ல் விலைவாசிகள் 30 சதவிகிதம் உயர்ந்துவிட்டன. வரியின் மூலம் 1945—46ல் வசூலிக்கப்பட்டது மொத்தம் ரூ. 26 கோடிமட்டுமே. ஆனுல் 1956—57ல் ரூ. 92 கோடியாக உயர்ந்துவிட்டது. இவைகளெல்லாம் இருந்துங்கூட, 'நாங்கள்தான் நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தோம்' என்று, பழைய பல்லவியையே பாடித் திரிகிருர்கள்."

இவ்வாறும் அக்கட்சிச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கிருர்!

ஓட்டுச் சேகரிக்க இந்தத் தந்திரம்!

வாக்காளருக்கு காங்கிரஸ் அபேட்சகரின் பயமுறுத்தல்

மாற்றுக் கட்சியினரைத் தூற்றியும் இழித்தும் பழித்தும் பேசி வரும் காங்கிரஸ் கட்சியும், அதன் 'தலைவர்'களும், எந்த அளவில் நேர்மை—நாணயத்துடன் நடந்துகொள்கின்றனர் என்பதை எடுத்துக்காட்ட நல்லதோர் செய்தி கிடைத்திருக்கிறது!

'எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் இன்னின்ன நன்மைகளைச் செய்திருக்கிறோம்' என்று சொல்லிக்கேட்க வகையற்று—வழியற்று, இப்போது தங்களுக்கு ஓட்டுச் சேகரிக்கப் புதிய ஒரு 'முறை'யை மேற்கொண்டிருக்கின்றனர்!

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியில் போட்டியிடும் இராஜேசுவர பிரசாத் என்ற காங்கிரஸ் அபேட்சகர் 'எனக்கு வருகிற பொதுத் தேர்தலில், வாக்காளர்களே, ஓட்டுப் போடுங்கள்; இல்லையென்ருல் நான் உண்ணுவிரதம் இருந்து சாகப்போகிறேன்' என்று கூறி, ஓட்டுச் சேகரிக்கிருராம்—அதுவும் 'எச்சரிக்கை' மூலமாக!

ஐந்தாண்டுத் திட்டம்

மத்திய மந்திரி 'சர்டிபிகேட்'

விசயவாடா, பிப் 8 —

'நாட்டின் வருவாயை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை நாட்டின் தேவையைக் கணக்கிட்டே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் வருவாய்க்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் பணத்திற்கும் இடையே விழும் 'துண்டை' மக்களுடைய உதவியினுல் சரிக்கட்டிவிடலாமென்ற நினைப்பிலேயே இது திட்டமிடப்பட்டுள்ளது."

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இங்கு நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் தந்துள்ள 'சர்டிபிகேட்'தான் மேலே தரப்பட்டிருக்கிறது!

இலங்கைக்கு 70 இலட்சம் டாலர் உதவி

கொழும்பு, பிப். 10—

1957-ல் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக, 70 - இலட்சம் டாலர் உதவியளிக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

கழகக் கூட்டம்

★

பெரிய கோட்டகம்:

வள்ளுவர் திடலில்

12—2—57 மாலை 5 மணிக்கு

தி. மு கழகத் துவக்கவிழா

தலைவர்: வ. திருநாவுக்கரசு

கொடியேற்றுபவர்: சண்முகம்

கழகத் திறப்பாளர்:

பொன். சொக்கலிங்கம்

பேசுவோர்:

அறிவுடைநம்பி

ஆறுமுகம்

ந. இராமலிங்கம்

சென்னை 31-வது வட்டத்தில்

தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

12-2-57 மாலை 6-மணிக்கு சென்னை 31-வது வட்டம் அழகிரி நினைவு மன்ற 3-வது ஆண்டுத் துவக்க விழாவும் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமும், சித்ரா டாக்கீசுக்குப் பின்புறமுள்ள சந்திரபானு தெருவில், திரு. டி. வேணுகோபால் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணநிதி, க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்.

சீரங்கம் தி. மு. கழகத் தொகுதிக் குழுக் கூட்டம்

13-2-57 இரவு 7-மணிக்கு, சீரங்கம் சிவப்பெருமான் கோயிலுக்கு அருகாமையிலுள்ள சங்கர் தோட்டத்தில், தி மு கழகத் தொகுதிக்குழுக் கூட்டம் நடைபெறும். அத்தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களில் யாருக்குக் கழக ஆதரவு தருவது என்பது குறித்து முடிவு செய்யப்பட இருப்பதால் தொகுதித் தோழர்கள் அனைவரும் தவருது வருகை தர வேண்டுகிறேன்" என்று திருச்சி நகர தி. மு கழகச் செயலாளர் எம். எஸ். மணி அறிவிக்கிறர்.

காஞ்சி—

கல்யாணசுந்தரன்

தேர்தல் சுற்றுப்பயணம்

பிப். 13: கோவை

,, 14: சூலூர்

,, 15: திண்டுக்கல்

,, 16: விழுப்புரம்

,, 17: கோலார்—பங்களூர்

அறிவுடைநம்பி

சுற்றுப்பயணம்

பிப். 12: சிதம்பரம் (தொகுதி)

13: காட்டுமன்னார்கோயில்

14: மாலை 6 மணி: மாம்பழப்பட்டு (விழுப்புரம் தொகுதி)

இரவு 8 மணி: காணை

15: மாலை 6 மணி: கெடார்

இரவு 8 மணி: அன்னியூர்

16, 17: வளவனூர் தொகுதி கூட்டங்கள்

18: மாலை 6 மணி: கடப்பாக்கம்

இரவு 8 மணி: குணம்பட்டு

19: செய்யூர்

நெல்லை சந்திப்பு கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

12—2—57 இரவு 9 மணிக்கு, மேற்படி மன்றத்தின் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அண்ணு அவர்கள் தரும் நாடக விருந்து!

12—2—57 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

[கே. வி. கே. சாமி அரங்கு]

★

அண்ணு, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும்

சந்திரோதயம்

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1; அணு 8.

குறிப்பு:—நாடகத்தன்று காலையிலிருந்தே அணு 8 பிரத்தியேகக் கட்டணத்துடன் முதல் வகுப்பு ரிசர்வ் செய்யப்படும்.

— (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயணசெட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.